அன்பான எங்கள் தேவ ஆவியே
அன்போடு வரவேற்கிறோம்-(2)
அடியார்கள் நாங்கள்
ஒரு மனத்தோடே உம்மை
அன்போடு வரவேற்கிறோம் -(2)

ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க
அப்பா பிதாவே என்று அழைக்க -(2)
அபிஷேக நாதரே வரவேற்கிறோம்
அன்போடு வரற்கிறோம் -(2)

பக்தி விருத்தி அடைந்து
நாங்கள் பாடித் துதித்திட தேவனை
பரிசுத்தமாகி தேவனை ஆடிப்பாடிட -(2)
பரிசுத்த ஆவியே உம் பெலன் வேண்டுமே
அன்போடு வரவேற்கிறோம்-(2)

பாவ சாப ரோகங்கள் ஓடிப்போய்விட
தேவ சாயலாக நாங்கள் தினம் மாறிட-(2)
ஆவியாலே கனி தந்து தினம் வாழ்ந்திட
அன்போடு வரவேற்கிறோம் -(2)